# திருக்குறளும் அரசியல் வாழ்க்கையும்

9

**அக்ஷயா. அ**
**கணித அறிவியல், இரண்டாம் ஆண்டு**
**புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி 620 002**

**ஆய்வுச் சுருக்கம்:**

**'ஒருவனுக்கு சிறப்பு தருவது இனமோ, மதமோ ஜாதியோ அல்ல.அவன் செய்யும் செயல் மட்டுமே சிறப்பைத் தருகிறது"**

என்ற இவ்வாக்கியத்தின் பெருமை எக்காலத்துக்கும் பொருந்தும்வகையில் இயற்றப்பட்ட திருக்குறளின் படைப்பாளனான வள்ளுவனுக்கே சொந்தமாகும்.. வள்ளுவன் வார்த்தைகளை எடுத்துக்காட்டாய்க் கொண்டு இக்கால அரசியல் வாழ்க்கை ஒப்பிட்டு சரியான அரசியல் நெறிமுறைகளை ஆராய்ந்து கண்டறிவோம்.

**முன்னுரை:**

திருக்குறளையும் திருவள்ளுவரையும் அறியாதோர் உண்டோ இப்பூவுலகில். திருக்குறள் ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு சிறந்து விளங்குவது

**அரசியலின் முக்கியத்துவம்:**

**"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னப்பன் கோல்நோக்கி வாழுங் குடி"**

என்று இறைமாட்சியில் (குறள்:542) இல் விளக்கப்பட்டது போல் உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைபடுவது போல் ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது என்று மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார். வள்ளுவரின் குறளானது அக்கால அரசியல் தேவைக்கும் இக்கால அரசியல் தேவைக்கும் ஏற்றவாறே அமைக்கப்பட்டுள்ளது. ஆதலாலே சிறப்பு பெயர்களான உலகப் பொதுமறை முதுமொழி திருவள்ளுவம் என்றெல்லாம் பல பெயரில் போற்றப்படுகிறது. இவ்வாறு திருக்குறளானது அரசியலில் செய்யக் கூடியவை செய்ய கூடாதவை என்று அனைத்தையும் அடக்கியுள்ளது. அரசியல் மட்டுமன்றி வாழ்விற்கு தேவையான வழிமுறைகளை எடுத்தியம்புவதால் இதனை வாழ்வியல் என்றும் அழைப்பர். மேலும்

**" குடிதழீகக் கோலோச்சும் மாறில மன்னன் அடிதழீஇ நிற்கும் உலகு"**

என்ற 544 ஆம் குறளில் அரசின் தொழிலை கூறியுள்ளார். அதன் பொருளாக குடிமக்களை வருந்தவிடாமலும் தானும் வருந்தாமலும் மக்களைக் காத்து மக்களுக்கு துன்பம் விளைவிப்பவரை அடையாளங்கொண்டு அவர்க்கு தண்டனையளித்துத் தன் பணியைச் செவ்வனே செய்பவரே நல்ல ஆட்சியாளர் எனவும் குற்றத்தை கடிந்துரைத்தல் ஆள்பவருக்கு வடுவாகாது. மாற்றாக அது ஆள்பவரின் தொழிலே ஆகும். என்று விளக்கியுள்ளார். மேலும் அரசன் எவ்வாறு இருக்கவேண்டும் என்றும் விளக்கியுள்ளார். இவ்வாறு அரசியலின் முக்கியத்துவம் ஒரு தேவை என்பதை நாம் அறிய முடிகிறது

**அரசனுக்குரிய பண்பு:**

**"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு"**

என்ற 881 ஆவது குறளுக்கு மு.வரதராசன் போர்ட் அளித்த விளக்கமானது படைகுடி குடிமக்கள் உணவு அரண்மனை அமைச்சர் அரசர் தன்மை ஆகிய ஆறும் கொண்ட ஒருவன் ஆண் சிங்கத்தை போன்ற அரசனாம் என்று வள்ளுவர் அரசபண்புகளையும் உபகரணங்களையும் எழுதி கூறியுள்ளதை விளக்கியுள்ளார்.

மேலும் முனைவர் வரதராசன் குறிப்பிட்டுள்ள காலம் தாழ்த்தாத தன்மை கலவியுடைமை துணிவுடைமை இந்த மூன்று பண்புகரும் நிலத்தை ஆளும் அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை என முனைவர் வரதராசன் வள்ளுவனின் குறளுக்கு பொருள்ளித்துள்ளார்.

**"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலனான் பவர்க்கு" (குறள் 383)**

**அரசன் அறிந்துகொள்ள வேண்டியவை :**

திருவள்ளுவனும் இக்கால அரசியலும் நாம் எதிர்பார்த்து கிடைத்தாயினும் நம் திறத்திற்கு கிடைத்ததாயினும் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பை நல்விதத்திலும் சுயநலமின்றி பொது நல மனதோடும் சிறப்பாக ஆற்றுவது நமது கடமை. வள்ளுவன் சிறந்த அரசனாய் திகழ சில நெறிமுறைகளை கொடுத்துள்ளார்.

**" காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல் மீக்கூறும் மன்னன் நிலம் "(குறள் 387)**

அதாவது மு.வரதராசன் விளக்கவுரைபடி காண்பதற்கு எளியவனாய்க் கடுஞ்சொல் கூறாதவனாய் இருந்தால் அந்த மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாட்டை உலகம் புகழும் என்று கூறியுள்ளார். இக்கால அரசியலுக்கு எடுத்துக்காட்டாய் எளிய மனிதன் 'கர்மவீரர் காமராஜர் '

வள்ளுவனின் இக்குறளுக்கு முற்றும் பொருத்தமுடையவர் இவர் கல்வி என்னும் ஒளி

மூலம் பொருளாதார ரீதியில் முடங்கிக்கிடந்த பாமரரின் இருளை அகற்றி இன்றும் மக்கள் மனதில் நீங்கா இடத்தில் வைக்கப்பட்டு போற்றப்படுகிறார். "அரசன் தனக்கில்லையென்றாலும் இல்லாதவருக்கு கொடுத்து உதவ வேண்டும். ஆனால் மக்கள்முன் விளம்பரம் காட்டி தான் உயர பணம் சம்பாதிப்பதோ அரசியல்! நல்லாட்சி இங்கிருந்தால் ஏழை ஜனம் ஏன் இன்னும் அதிகரிக்கிறார்கள்? தன்னலமின்றி சேவைக்காக அரசியல்வாதிகளான காலம் போகி தன்னலம் மட்டுமே போதுமென்று அரசியலில் நுழையும் காலம் வந்துவிட்டதோ .

காமராஜரோ ஏழை மக்களுக்காகவே இலவச பள்ளி சத்துணவு எனப் பலதிட்டங்களை இயற்றினார். காமராசர் ஐயாவோ சிறுபிள்ளைகளிடையே ஏற்ற தாழ்வு மனப்பான்மை வரக்கூடாதென சலுகைகள் பல செய்தார். இன்று பலர் இலட்ச இலட்சமாய் பணம் கொடுத்து தன் பிள்ளை வசதியான பள்ளியில் படிக்க வேண்டுமென்று படாத பாடுபட்டு படிக்க வைக்கின்றனர்.

அரசியல் என்பது மக்களுக்கு தேவையை நிறைவேற்றுவதோடு நன்னெறிகளையும் ஊட்டி வளர்க்க வேண்டும்

**“அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே செல்வத்தை தேய்க்கும் படை" (குறள் 555).**

இக்குறளுக்கு கலைஞர் அளித்த விளக்கமானது கொடுமை பொறுக்க முடியாமல் மக்கள் சிந்தும் கண்ணீர் ஆட்சியை அழிக்கும் படைக்கருவியாகும். எனக் கூறியுள்ளார். அழுது புலம்பும் சிலரின் பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய கண்ணீர் ஆட்சியை அழிக்கும் படைக்கருவியோ! ஆம் ஆங்கிலேயரின் அடிமைத்தனத்தில் சிக்குண்டு புலம்பிய கண்ணீரும் கவலையும் அன்றோ தலைவர்கள் எழுப்பப்பட்டு ஆங்கிலேயரின் ஆட்சியை அழித்தது

எனவே சில காலங்களில் அரசியல் வாழ்க்கை நல்விதத்திலும் சில காலங்களில் சில மோசடிகளும் நடந்து வருகிறது.

அரசன் தன் நாட்டு மக்களை அறிந்தவனாய் அவர்களின் தேவைகளையும், குறைகளையும் பூர்த்தி செய்து வைக்க வேண்டும். அரசன் தன் மக்களின் நல்வாழ்வுக்கு அயராது உழைத்திட வேண்டும்.

சரி

**"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து" (561)**

**மு.வரதராசன் :**

செய்த குற்றத்தை தக்கவாறு ஆராய்ந்து மீண்டும் அக்குற்றம் செய்யாத படி குற்றதிற்கு பொருந்துமாறு கண்டிப்பவனே அரசன்.

அக்கால அரசியல் முறைப்பற்றி அறியாமை இருந்தாலும் குற்றச் சாட்டின் வீதங்களை கணக்கிட்டால் பெரும்பாளாக ஏற்றம் பெற்றுள்ளதை காணமுடிகிறது.160 விகிதத்திலிருந்து தற்காலிகமாக 445.9 விகிதத்திற்கு அதிகரித்துள்ளது இன்றுமா குற்றம் செய்பவனை ஆராய்ந்து ஏற்ற தண்டனையை அளிக்கிறார்கள். தண்டனை கொடுக்கப்படுகிறது. ஆனால் அது அவனை உணரவைக்கும் அளவில் வழங்கப்படுவதில்லை சரியான குற்றவாளிகளுக்கு வழங்கப்படுவதில்லை. வருங்கால அரசியல்வாதிகளை எண்ணி சற்று பயமும் கூட உண்டு. வள்ளுவர் பெரியோரைக் கேட்டல் என்ற தலைப்பில் சில குறள் மூலம் முதியோர் அறிவுரையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளார். சந்தேகம் என்னவென்றால் வரும் தலைமுறையினர் தன் பெற்றோர் சொல்லைக் கேட்பதே அறிதாக வியக்க வைக்கிறது இதில் அவர்களின் அரசியல் வாழ்க்கை!!!